# 25 ஈழத்துச் சமய இலக்கியங்கள்

ஈழத்து அறிஞர்களால் எழுதப்பட்ட இலக்கியங்களில் சமய இலக்கியங்கள் முக்கியமானவை. அவற்றுள் விரதங்கள், தலங்கள் என்பவற்றின் மகிமைகளைக் கூறும் புராணங்கள் பற்றி இங்கு பார்ப்போம்.

**(அ) விரத மகிமை கூறும் புராணங்கள்**

ஒல்லாந்தர் காலத்திற் சமய உண்மைகளை விளக்கும் சைவ சமயம் சார்பான புராணங்கள் பல எழுந்தன. அவற்றுள் சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் என்பவை குறிப்பிடத்தக்கவை. அவை இரண்டும் காசியிலிருந்து வந்து சுன்னாகத்தில் குடியேறிய வேதியர் குலத்திற் பிறந்த வரதபண்டிதர் என்பவரால் இயற்றப்பட்டவையாகும். வரதபண்டிதர் கி.பி 18 ஆம் நூற்றாண்டில் இந்நூல்களை இயற்றினாரென்பர். ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய சமயச் சுதந்திரத்தின் வெளிப்பாட்டையும், அக்காலத்தில் தனிமனிதர்கள் ஈழத்தில் சைவமரபைக் காத்தளித்து நிலைநிறுத்திய தன்மையையும் அவரது பணிமூலம் நாம் அறியமுடிகின்றது.

**சிவராத்திரி புராணம்**

சிவனுக்குரிய முக்கிய விரதங்கள் பல உள்ளன. அவற்றுள், சிறந்த விரதமாகிய சிவராத்திரி விரதத்தின் வரலாறு, மகிமை, நோற்கும் முறை என்பன சிவராத்திரி புராணத்தில் கூறப்பட்டுள்ளன. இவற்றை சூதமுனிவர் மற்றைய முனிவர்களுக்கு விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது. சிவராத்திரி விரதத்தாற் பயனடைந்த பலரின் கதைகள் நூலில் இடம் பெற்றுள்ளன. வரதபண்டிதர் வடநூல்களிலுள்ள சிவராத்திரி மான்மியத்தைத் திரட்டி, ஒரு புராணமாகப் பாடியுள்ளார். அவரால் இயற்றப்பட்ட நூல்களுள் இது அளவிற் பெரியது; சொற்சுவை, பொருட்சுவை மிக்கது. காப்புச் செய்யுள் உட்பட எழுநூற்றுப் பதினைந்து செய்யுள்களையும் ஒன்பது சருக்கங்களையும் இந்நூல் கொண்டுள்ளது.

**ஏகாதசிப் புராணம்**

இது விஷ்ணுவுக்குரிய சிறந்த விரதமாகிய ஏகாதசி விரதத்தைப் பற்றிக் கூறும் புராணமாகும். ஏகாதசி விரதத்தின் மான்மியத்தை விரித்துக் கூறுவதால், **ஏகாதசிப்புராணம்** என்னும் பெயர் இந்நூலுக்கு வழங்கப்படுகின்றது. இப்புராணத்தில் ஏகாதசி விரத கால நிர்ணயம், விரத மகிமை, விரதம் அனுட்டித்தோர் சரித்திரம் என்பன கூறப்பட்டுள்ளன. அத்துடன், ஏகாதசிப் புராணம் கடவுள் வாழ்த்து, பாயிரம், ஆகியவற்றையடுத்து, காலநிர்ணயச் சருக்கம், உருக்குமாங்கதச் சருக்கம், வீமேகாதசிச் சருக்கம் என்பன கொண்டமைந்துள்ளது. மூன்று சருக்கங்களையும் இருநூற்றி ஐம்பத்தெட்டுச் செய்யுள்களையும் கொண்டுள்ள இந்நூல் சொற்பொருள் வன்மையும், கவித்திறனும் மிக்கதாகும்.

**(ஆ) தலமகிமை கூறும் புராணங்கள்**

புராண வகைகளுள் தல புராணங்களும் அடங்கும். தல புராணம் என்பது குறித்த தலத்திலுள்ள மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்களை எடுத்துக் கூறும் நூலாகும். இலங்கையில் எழுந்த தலமகிமை கூறும் தல புராணங்களுள் திருக்கரைசைப் புராணமும் ஒன்றாகும்.

திருக்கரசைப் புராணம் .திருகோணமலைக்கு அருகில், மகாவலி கங்கைக் கரையில் அமைந்துள்ள கரைசை என்ற இடத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் புகழை விரித்துக் கூறும் நூலாகும். கரைசையம்பதி '**அகத்தியத் தாபனம்**' எனவும் அழைக்கப்படுகின்றது. அகத்தியர் இத்தலத்தை தாபித்தாரென, திருக்கரைசைப் புராணம் குறிப்பிடுகின்றது. இந்நூலினை இயற்றியவர் பற்றித் தெரியாதாகையால், அவர் செய்த நூலின் பெயரால் அவரைக் கரைசைப் புலவர் என்று காரணப் பெயரால் அழைப்பர்.

இந்நூல் பாயிரத்துடன் இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச் சருக்கம், பூசைச் சருக்கம் என்னும் சருக்கங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. அவ்வகையில் திருக்கரைசைப் புராணம் சிறந்த தலபுராணமாக விளங்குகின்றது.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சைவசமயம் தொடர்பான புராணங்கள் 2 தருக?
2. ஏகாதசி விரதம் எக்கடவுளுக்குரியது?
3. தலபுராணங்கள் எவை பற்றி கூறுகின்றன.

**செயற்பாடு**

1. வரத பண்டிதர் இயற்றிய சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் என்பவற்றை ஆசிரியரின் உதவியோடு தேடி அறிக. அவற்றிலுள்ள முக்கிய விடயங்களை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. திருக்கரைசைப் புராணம் தொடர்பான விடயங்களைத் தேடித் தொகுத்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**பாடச்சுருக்கம்**

- ஒல்லாந்தர் காலத்தில் ஈழத்தில் சைவ மரபைக் காத்தளித்து நிலைநிறுத்தியவர்களில் வரதபண்டிதர் குறிப்பிடத்தக்கவர்.
- தல புராணம் என்பது குறித்த தலத்திலுள்ள மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்களை எடுத்துக் கூறும் நூலாகும்.
- இலங்கையில் எழுந்த தலமகிமை கூறும் தல புராணங்களுள் திருக்கரைசைப் புராணமும் ஒன்றாகும்.


இலவச விநியோகத்திற்காக